**இந்தியத் துணைத் தூதரகம்**

**யாழ்ப்பாணம்**

**ஊடக அறிக்கை**

யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தின் 215,000 ரூபாய் நிதி அன்பளிப்புடன் வட இலங்கை சங்கீத சபையும் நடாத்திய சற்குரு தியாகராஜ சுவாமிகளின் 172வது இசை ஆராதனை நிகழ்வு யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில் இன்று (23 பெப்ரவரி) வெகு சிறப்பாக இடம்பெற்றது.

வடமாகாண ஆளுனர் மேதகு முனைவர் சுரேன் இராகவன், முன்னாள் வடமாகாண எதிர்கட்சித் தலைவர் தவராசா, ஆளுனரின் செயலாளர் இளங்கோவன், யாழ் இந்தியத் துணைத் தூதுவரின் பிரதிநிதி ஜோர்ஜ், வட இலங்கை சங்கீத சபை உறுப்பினர்கள், இசைக் கலைஞர்கள், இசை ஆசிரியர்கள், மாணவர்கள், இசை ஆர்வலர்கள் உள்ளிட்ட 700ற்கும் மேற்பட்டவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மங்கல வாத்திய இசையுடன் ஆரம்பித்த நிகழ்வில் சற்குரு தியாகராஜ சுவாமிகளிற்கு சிறப்பு வழிபாடு இடம்பெற்றதுடன் தேவாரமும் அதனைத் தொடர்ந்து வட இலங்கை சங்கீத சபை கீதமும் இசைக்கப்பட்டது. வடமாகாண ஆளுனர் தனது உரையில் இசைக்கலையை நாம் ஒவ்வொருவரும் முறையாகப் பயின்று அதனை வளர்த்தெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து சற்குரு தியாகராஜ சுவாமிகளால் இயற்றப்பட்ட பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இசைக்கலைஞர்கள் பாடி அவருக்கு இசை அர்ச்சனை செய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்புடைய புகைப்படங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

***

# Consulate General of India

# Jaffna

# Press release

With the grant of 2.15 lakhs provided by the Consulate General of India in Jaffna, the North Ceylon Oriental Music Society organized the 172nd Sadguru Thiyagaraja Swamigal's music Aradhana at NCOMS auditorium today (22nd February).

Hon'ble Governor of Northern Province, Dr.Suren Raghavan, former NPC Leader of Opposition, Mr.Thavarasa, Governor's Secretary Mr.Ilaangovan, Mr.George, representative from the Consulate General of India in Jaffna, North Ceylon Oriental Music Society members, including music artists, music teachers, students and music lovers, more than 700 people participated in the event.

The program started with the instrumental music, special tribute to Sadguru Thiyagaraja Swamigal followed by North Ceylon Oriental Music Society's Anthem. Hon'ble Governor requested everyone to learn music and master it. Following this, a tribute was paid to Sadguru Thiyagaraja Swamigal by singing the "Pancharathina Keerthanai"

The photos are attached.